முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 838

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.01.2022, வெள்ளிக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா வாழ்க
அன்னதான சேவையாற்றும் தேசிகா வாழ்க
ஏறுமுகம் உலகமக்கள் அடையவேண்டி
ஏழாம்படைவீடு கொண்ட குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வரமென அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
தாழ்விலா பிலவ கலைத்திங்கள் தன்னில்
தக்க ஞான அறிவுரை ஆசி அருளுவேன்
(பிலவ வருடம் தை மாதம் முதல் நாள், 14.01.2022 வெள்ளிக்கிழமை)
3. அருளவே அரங்கனே கலியுகத்தின் சிறந்த ஞானி
அரங்கன் தர்மமே உலகை மீட்கும் உயர்ந்த மார்க்கம்
பெருமைபட அரங்கன் நாமஜெபம் சொல்லி
பேருலகமெங்கும் அரங்கன் பெயரில் தர்மம்
4. தர்மம் தொடர்ந்து செய்தால் போதுமப்பா
தரணிக்கு வந்த ஆபத்தெல்லாம் தானாய் அகன்றோடும்
ஓடுமே வஞ்சம் தீவினை ஊழ் என்கின்ற சகல
இடர்பாடுகளும் மக்களை விட்டு அகன்றோடி
5. ஓடியே நல்லோர்கள் ஆட்சி
உயர்வான ஞானவான்கள் பதவிக்கு வந்து
நாடெங்கிலும் முருகப்பெருமான் தலைமை ஏற்ற
ஞான ஆட்சியாக சடுதி மலரக்கூடும்
6. கூடவே அரங்கன் காட்டும்
குறையில்லாத சன்மார்க்க நெறியும்
நாடெங்கிலும் அரங்கன் தர்மமும்
ஞானபலமாக வளர்ந்தால் போதும்
7. போதுமப்பா இந்த மாற்றத்தை புண்ணிய பலத்தைகொண்டே
ஆறுமுகன் ஆற்றல்பட சடுதி நடத்தி
உலக மக்களுக்கு மகிழ்வும் அமைதியும்
அரங்கன் வழி வரமாகத் தந்து அருள்புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–